# அருள் ஒளி



வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

புரட்டாதி
மாத
இதழ்

தெல்லிப்பழை
இலங்கை
2006


மலர் 49

## துர்க்காதேவி தேவஸ்தான திருவிழாக் காட்சிகள்



சிவத்தமிழ்ச் செல்வி அன்னை அருளுரை வழங்குகிறார்

மணிவிழாக்காணும் இவர்களை வாழ்த்துகிறோம்.



இலண்டன் சைவ முன்னேற்றச்சங்க
ஸ்தாபகர்
உயர்திரு. இ. இராமநாதன்



அவுஸ்திரேலியா சைவமன்றத்தின் நிர்வாக உறுப்பினரும்
அவுஸ்திரேலியா ஈழத்தமிழர் கழகத்தலைவருமான
உயர்திரு. வை. ஈழலிங்கம் (விரிவுரையாளர்)



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

*ஆசிரியர்:*

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

*உதவி ஆசிரியர்:*

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2006 வியய வருடம் புரட்டாதி மாதம்

மலர் **49**

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல, QD/74/NEWS/2006Y}

## அவலங்கள் நீங்க இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்.

எங்கள் மண்ணில் என்றும் இல்லாதவாறு அச்சமும் அவலமும் சூழ்ந்திருக்கின்றது. ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் என்று விடியும் என்று ஏங்கியவாறு தம் வாழ்நாளைக் கழித்து வருகின்றனர். இந்நிலையில் ஆத்மீக சூழல் ஒன்றே அவலத்தைப் போக்க வல்லது என யாம் உணர்கின்றோம். "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிட்டார்கள். என்றும் நாம் நம் தேசத்துக்காக பிரார்த்திக்க வேண்டும். நாடு அமைதியாக இருந்தால் தான் நாட்டில் வாழும் மக்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும். என்ன வசதிகள் இருந்தாலும் நாட்டில் அமைதி இல்லாவிட்டால் எந்த மனிதனும் நிம்மதியாக வாழ முடியாது. எனவே எத்துயர் வரினும் எல்லோருக்குமாக பிரார்த்தித்து விடிவு பெறுவதே இறை அடியவரின் கடமையாகும். இன்பத்திலும் துன்பத்திலும் எம்மை ஆற்றிப்படுத்தக்கூடிய சக்தி இறைசக்தி ஒன்றே. துன்பம் வருகின்ற போது மட்டும் இறைவனை அழைப்பதும் ஏனைய பொழுதில் யாவும் எம்மால் நடக்கிறது எனக் கருதுவதும் நாம் செய்யும் தவறாகும். எப்போதும் இறை நம்பிக்கையோடு எம் வாழ்வைக் கழிக்க வேண்டும். எம்முன்னோர் போர்ச்சூழலிலும் இயற்கையால் வந்த இடையூறுகளிலும் இறைவழிபாட்டினால் எவற்றையும் எதிர்கொள்ளலாம் என்பதனை எமக்கு நிருபித்துள்ளனர். எனவே அஞ்சுவதை விடுத்து நாம் வணங்கும் தெய்வங்கள் நமக்கு அரண்களாக நின்று நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு எங்கள் கடமைகளைச் செய்ய முயல்வோம். உண்மையான பக்தி உடனுக்குடன் பலன் தரும் என்ற நம்பிக்கை எம்மிடையே வலுப்பெற வேண்டும். எமது மக்களுக்கு ஆத்மீகப் பலத்தை அவல நேரங்களில் எடுத்துரைத்து ஆறுதல்படுத்த வேண்டியது ஆத்மீகம் சார்ந்த பெரியவர்களின்

கடமையாகும். ஆலயங்கள் தோறும் வாழ்விடங்கள் தோறும் மனோபலத்தை உருவாக்கக் கூடிய பிரார்த்தனைகள் இக்காலத்தில் மிகவும் அவசியமாகும். எம்மண்ணில் அசாதாரண சூழ்நிலை தொடர்ந்து கொண்டிருக்கும் வேளை ஆலய உற்சவங்கள் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நல்லைக் கந்தப் பெருமானின் திருத்தேர் பல இலட்சம் மக்கள் புடைசூழ பவனி வருவது வழக்கம். ஆனால் இம்முறை நல்லூர் வீதியில் திருத்தேர் ஓடவில்லை. அசாதாரண சூழ்நிலையால் வேலவன் வெளிவீதியில் உலா வராது உள் வீதியிலேயே சிறிய தேரில் பவனி வந்தான். மக்கள் கதறினர். இந்நிலையில் நல்லூரான் விழா முடிவுற மறுநாள் தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளின் திருவிழா ஆரம்பமாகியது. ஆலய நிர்வாகத்தை ஆற்றுப்படுத்தும் அன்னை சிவத்தமிழ் செல்வி அவர்கள் அடியார்களுக்கு ஓர் அறைகூவல் விடுத்தார். அடக்கமாக அமைதியாக அம்பாளை அழுது கும்பிடுங்கள், திருவிழா தீதின்றி நிறைவாக வேண்டும் என்று மன்றாடுங்கள். விழா தொடங்கியது திருத்தேர் விழா அன்று பெரும் மக்கள் கூட்டம். அச்சத்தோடும் அவலத்தோடும் வாழும் மக்கள் தங்களை மறந்து அம்மா தாயே நீயே தஞ்சம் என்று வழிபாடு செய்தனர். பல மாதங்களாக மழை பெய்யாது இயற்கையும் இடையூறு செய்தது. திருத்தேரில் அம்பாள் எழுந்தருளி தீப ஆராதனை தொடங்கியது. பேரிரைச்சலோடு பெருமழை பெய்யத் தொடங்கியது. ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பக்த வெள்ளம் மழையில் நனைந்த வண்ணமாக அம்பாளின் திருத்தேரை வடம் பிடித்து இழுத்தார்கள். என்ன அதிசயம் திருத்தேர் வீதியில் ஓடிய வெள்ளத்தில் எவ்விடத்திலும் புதையாது இருப்பிடத்தை நோக்கி வந்தது. இருப்பிடம் வந்ததும் மழையும் நின்றது. அங்கப் பிரதட்சனம், அடியழித்தல் செய்யும் அடியார்களும் அம்பாள் திருத்தேரைத் தொடர்ந்து மழை வெள்ளத்திலும் நேர்த்திகளைச் செய்தனர். துர்க்கையின் திருவருளை எல்லோரும் வியந்தார்கள். என்ன அதிசயம் என்றால் அன்று பெய்த மழை தெல்லிப்பழைக் கிராமத்தை சுற்றி பெய்து விட்டு மறைந்தது. இந்த அதிசயத்தை கேள்விப்பட்டவர்கள் அம்பாளின் திருவருளை வியந்து போற்றினார்கள். இரக்கமே வடிவான இறைவன் என்றும் எம்மைக் காப்பாற்றுவதற்கு ஏதோ ஒரு வடிவத்தில் வருவான் என்பதனை நாம் நம்புவதோடு மற்றவர்களிடத்திலும் அந்நம்பிக்கையை வளர்க்க வேண்டும். எம்மண்ணில் ஏற்பட்டுள்ள அவலநிலையைப் போக்குவதற்கு அனைவரும் இடைவிடாது பிரார்த்தனை செய்வோம். துன்பப்படுபவர்களுக்கு எம்மால் இயன்ற ஆறுதல் செய்வதற்கு நாம் முன்வர வேண்டும். எம்மை வழிநடத்தும் தெய்வங்களை எம்மண்ணில் அமைதியும் ஆனந்த வாழ்வும் அனைவருக்கும் விரைவில் கிடைக்க வேண்டுதல் செய்வோம்.

-ஆசிரியர்-

# இன்பகன மகிமை.

பேறிஞர் முருகவேபரமநாதன் அவர்கள்

சச்சிதானந்தசொருபியாகியநடராஜனை இன்பகனம் ஆனவன் எனச் சைவ சித்தாந்த சாத்திரம் உணர்த்துகின்றது. இன்பகனம் என்பதன் பொருளை நன்கு விளங்காத சிவனடியார்கள் அநேகர் உள்ளனர். அதனாற்றான் அவர்கள் ஆலயங்களில் பலவிதமான பொருள்களைச் சிவனக்குக் குருமார் மூலம் நிவேதிக்கின்றனர். நிவேதனப் பொருள்களை ஏற்று அனுபவித்து ஆனந்தம் அடைபவன் சிவனெனக்கருதுகின்றனர். இன்பகனமாக விளங்கும் சிவனை சிவன் திரிபுடிஞானம் பெற்றவன். அதாவது அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும், பொருள், அனுபவம் மூன்று திறன் அறிவு இல்லாதவன், சிவனானவன் அடியார்களுக்கு இன்பத்தை அளிப்பவனேயன்றித்தான் எவ்வகையிலும் இன்பத்தை அனுபவியாதவன், விருப்பு வெறுப்பு அற்றவன், தூய உடம்பினனான, மலமேது மற்ற சிவனுக்கு அபிடேகம் எய்தல் எதற்கு. புறப்பூசையாற் பயனில்லை தியானம் செய்வது நன்று.

சிவநடனம் பக்கம் 179

மேலைநாட்டவர்கள் தியானம் செய்வதில், தாவர உணவில் அக்கறையுள்ளவர்களாய், ஆர்வம் உள்ளவர்களாய்க் கிழக்கை நாடுகின்றனர். யோகக்கலையை விரும்பி வளர்க்கிறார்கள். டாக்டர்கள் கூட, கூடின இரத்த அழுத்தம், மன அழுத்தம், சைக்காஸ்ரிக் உள்ளவர் கணைத்தியானஞ் செய்யும்படி அறிவுரை கூறுகின்றனர். சைவ சமயிகள் யோகக்கலையை கைநெகிழ விட்டு, சடங்கு சம்பிரதாயங்களிலே திருப்தி காணுகின்றனர். பிராமணரும் வெறும் சடங்கிலேயே ஆழங்காற்பட்டுள்ளனர். தம்சமயம் பற்றி ஆலயங்கள் எதுவுமே செயற்படுவதில்லை. பௌத்த சமயத்தினர் நம் ஆலயங்கட்கு வந்தாலும், தம்விகாரைகளிலும் ஒரு துணியை விரித்து அதன் மேல் தியானம் செய்யக்காண்கின்றோம். இதனால் மேற்கத்தையர்கள் பௌத்த நிலையங்களையே நாடிச் செல்கின்றனர். இந்த மன ஒருமைப்பாடு புலனொடுக்கம், இறைநினைப்பு என்பன மனித சமுதாயத்திற்கு நல்ல பிரயோசனத்தைத் தருகின்றது. சைவசமயிகளாய நாம் ஆடம்பரங்களை விடுத்து மனவளக்கலையை மேற் கொள்வதால் சாந்தியும், அமைதியும், சந்துஷ்டியும் அடையலாம்.

வெளிநாடுகளில் சமயநிலையங்கள், ஆலயங்கள் சமுதாய மையங்களாய் இயங்க வேண்டும். சமய இயக்கங்களாய்மாறி நல்ல சேவை செய்யமுன்வர வேண்டும். வெறும் சடங்கு, அபிடேகம், விழா நோன்பு எடுத்துப் பயனில்லை. நம் பயணம் ஒரு ஆத்மீக பயணமாய், அந்த இலக்கை அடையும் இலட்சியப் பயணமாய் அமைய வேண்டும். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலேயே வெள்ளையர் தியான மன்றங்களை ஆரம்பித்துள்ளனர் மட்டுமன்றி நல்ல சாதனையாளராயும் திகழ்கின்றனர். உதாரணமாக சுவிஸ்நாட்டில் வின்ரத்தூர் என்னும் இடத்தில் அமைந்த ஓங்காரானந்தா ஆச்சிரமம் முன்னுதாரணமாம். பௌத்த நிலையங்களில் பல வெளிநாட்டவர் இலங்கையில் தியானத்தைக் கற்றுத்தம் ஆன்மீக தாகத்தை நிறைவேற்றுகின்றனர். அவர்கள் தாம் மேற்கொள்ளும் (சைவ இந்து) இயக்கங்களிலே ஈடுபட்டு நல்ல சாதனையில் பற்றுறுதியோடு தொழிற்படுகின்றார்கள். நாமோ அபிடேகம், யாகம், ஓமங்களை மேற்கொண்டு எம் சிந்தனைதனை மழுப்பிக் கொள்கிறோம். அடுத்தபரம்பரையைப் பற்றி, எட்டுனையும் புலம் பெயர்நாடுகளிற் சிந்திப்பதாய் இல்லை. மூட நம்பிக்கைகள், கண்மூடி வழக்கங்கள். பேய்பிசாசுகள், எண்சோதிடம். சாந்தி செய்தல் என்பவற்றிலேயே நம் நம்பிக்கைகள் வளர்கின்றன. ஹரேராம ஹரே கிருஷ்ணா இயக்கத்தில் மேல்நாட்டவரின் ஈடுபாடு அசைக்கமுடியாதது. நாம் மடங்களாக்கி வெறும் பூசை

நிலையங்களாக- சாப்பாட்டுக் கடைகளாக, கேற்றறிங் செய்யும் இடங்களாக மாற்றிக் கொண்டோம். இவற்றில் இருந்து விடுபட நல்ல பகுத்தறிவுச் சிந்தனைகள் விதைக்கப்பட வேண்டும். ஒரு சிறந்த, முன்மாதிரியான ஆன்மீக சமுதாயத்தை உருவாக்கி ஆன்ம விடுதலைக்கு அவர்களை வழிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். பழைய குட்டைகளிலே குளியாமல் புதிய ஊற்றிலே நீராடும் புத்தூக்கம் பெறவேண்டும். வன்முறைகள், உயிரழிப்பு, பெண்ணியல்வன் செயல்- கொலை கொள்ளை போன்ற சமுதாயத்துரோகங்கள் மனித மனதில் முளையாமல் கிள்ளியெறியச் சமயங்கள்- சமயவாதிகள், ஆலயங்கள் இயங்க வேண்டும்.

ஆதியிலேயே இறைவனை உள்ளத்திலேயே கண்டுவழிபடு என்ற சிந்தனையை நாம்விட்டு புறத்தியிலே நக்குகிறோம். உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீற்றக் கூடாது. இதை மனதிலே கொண்ட அருளாளர் அகவணக்கத்தை அறிமுகப்படுத்தினர். தாயுமான சுவாமிகளின் பாடலொன்று இதை விளக்குகின்றது.

துள்ளும்அறியாமனது பலிகொடுத் தேன்கர்ம
துஷ்டதே வதைகள் இல்லை,
துரியநிறை சாந்த்தேவதையாம் உனக்கே
தொழும்பன் அன்பு அபிஷேக நீர்
உள் உறையில் என்ஆவி நைவேத்தி யம்ப்ராணனன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகாலம் அன்றுஇது சதாகால பூஜையா
ஒப்புவித்தேன், கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே
திவ்வியரசம் யாவும் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன் அறி வுடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்ல உறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே! கருணாகரக்கடவுள் 8

துரியநிறை - நிறைவாயுள்ள ஆத்மா, தொழும்பன் - தொண்டன், ஓங்குமதி - நல்லறிவு இ-ள்: துள்ளும் - துள்ளும், மறியாம்மனது - மனமாகிய ஆட்டினை பலிகொடுத்தேன் - பலியிட்டேன், கர்மதுஷ்டதேவதைகள் இல்லை (ஆதலால்) கன்மமாகிய துட்டதேவதைகள் இனி என்னை வருத்தமாட்டா, துரியம் நிறை துரிய பதத்தில் நிறைந்த, சாந்த தேவதையாம் உனக்கே - சாந்த குணமுடைய தேவதையாம் நினக்கே தொழும்பன் அன்பு, அபிஷேகநீர் - உனது தொண்டனான அடியேனுடைய அன்பானது, அபிஷேக நீர் - திருமஞ்சன தீர்த்தமாகும், உள் உறையில் - தேவரீர் என் மனத்திற் தங்கினால், என் ஆவி என் உயிரானது, நைவேத்தியம் - நைவேத்திய மாகும், ப்ராணன் - பிராணவாயுவும், ஓங்குமதி - உயர்ந்த அறிவும், தூபதீபம் - தூப தீபங்களாகும். இது - இவ்வாறு அடியேன் பூசனை புரிவதாகிய இது, ஒருகாலமன்று - ஒரு பொழுதின் மாத்திரமேயல்ல, சதாகால பூசையா ஒப்புவித்தேன் - சதாகால பூசையா ஒப்படைத்தேன், (ஆதலால்) கருணை கூர் - மிகுந்த கருமையைச் செய், மறைதெள்ளிவடியிட்ட - வேதங்கள் தெளிவித்து - வேதங்களாற் தெளிவித்து வடிக்கப்பட்ட, அமுதப்பிழம்பே - அமிர்தத்தொகுதியே! தெளிந்த தேனே, சீனியே - சீனிச்சாக்கரையே, திவ்வியரசம் யாவும் - தெய்வீகமான சுவைகள் எல்லாம், திரண்டு ஒழுகுபாகே - ஒரு சேரக்கூடி ஒழுகா நின்றபாகே, தெவிட்டாத ஆனந்தமே -

வெறுக்கப்படாத இன்பமே, கள்ளன் அறிவூடும் - கள்ளனாகிய என்னறிவிடத்தும், மெள்ள மெள்ள - பையப்பைய, வெளியாக்கலக்கவரும் - வெளிப்படக்கலக்கவருகின்ற, நல்ல உறவே - நன்மையைப் பயக்கின்ற சுற்றமே! கருதரிய நினைத்தற்கரிய, சிற்சபையில் - சிற்றம்பலத்தில் ஆனந்த நிர்த்தமிடு - ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணாகரக் கடவுளே - கருணைக்குப் பிறப்பிடமாய் இருக்கின்ற கடவுளே.

ஆலயங்களிலே பரார்த்தம், ஆத்மார்த்தம் என இருபூசைகள் செய்வர். உலகசேமம். ஆன்மவிடுதலை என இருவகைப் பிரார்த்தனை நம் சமயத்து வழிபாடாகும். இவ்வண்ணமே காமிகம்வாசிகம் மானசம் என்னும் மூவகையுள் இப்பாடல் மானசபூசை பற்றிப் பேசுகின்றது. மனதைப் பலியிடும் பொருளான ஆடாக உருவகம் செய்ததற்கேற்ப, கன்மத்தினைத் துஷ்டதேவதையாகவும், சாந்தத்தினைப் பரதேவதையாகவும், அன்பினை அபிஷேகமாகவும், பிராணனைத் தூபமாகவும், அறிவினைத்தீபமாகவும் கூறியுள்ளார் தாயுமான சுவாமிகள். காலாகாலமாக நம் சைவம் பேசும் அன்பே சிவம் என்ற தத்துவத்தை வீசிவிட்டு மனசைத் தூசிபடிய வைக்கிறோம். தூசிதட்டி இந்த உயிரும் உடலும் ஒன்றித் தொழிற்படும் மனிதத்தைப் பயன்படுத்தத் தவறுகின்றோம். பாற்கரங்கள் ஆயிரமாயிரம் எடுப்பது பற்றியும், நவகோடியர்ச்சனை செய்வது பற்றியும், விழா வெடுப்பது பற்றியும், சடங்குசம்பிரதாயங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதற்கு அப்பாலே தன்னையறிந்து தலைவனையடையும் சோகம் பாவனையை அறிமுகம் செய்யத் தவறிவிட்டன. ஆலயங்கள் எம்பெருமானுக்கு அணிந்த வத்திரத்தையும், எப்பிராட்டிக்கும் போட்ட பட்டையும் விற்கிற நிலையில் நாம் ஏமாற்றப்படுகிறோம். புனிதமான அப்பொருள் வியாபாரப் பொருளாவதா- நம் மண்ணிலே பச்சைப் பாலர்கள், பெண்கள், மாணவர்கள், மூத்தோர், வறியோர் சமவேளை நிகழ்வுகளால் நலியும் போது- நாமென் செய்கிறோம். நாம் சிறிது சிந்தித்துச் சேவை செய்வோமாக. மக்கள் சேவையே மாதவன் சேவையென்று பேசியும், எழுதியும் பயனென். தவனை போலப் பஜனை செய்தென. நாம் ஆன்ம ஈடேற்றத்துக்கான தியானம்- செய்வோமாக. இந்தத்தத்துவத்தையே "இன்பகனமகிமை" அழுத்தம் திருத்தமாக எமக்கு அறிவுறுத்துகின்றது.

அப்பர் பெருமான் தொண்டின் சிகரம், பாட்டின் வேந்தன், அவரும் இந்த தன்னுள் இறைவனைக் காணும் பூசையைப் பற்றி என்ன சொன்னார் என்பதையும் சிந்திப்போம்.

மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தைவித்தி
வொய்மையாம் களையை வாங்கிப் வொறையெனும்
நீரைப்பாய்ச்சி
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள்நிற்பராகிற் சிவகதிவிளையுமன்றே திருமுறை 4:76.2

உண்மை. உழவு, விருப்பம் - வித்து, பொய்மை - புல் (களை) பொறை - நீர் தகவு - தகைமை - வேலி செம்மை - செந்நெறி வாழ்வையே ஒரு விவசாயமாக மாற்றி - நல்ல அறுவடைக்குவழி காட்டுகிறது இப்பாசுரம், காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்பூசனை ஈசனார்க்குப் போற்றிவிக் காட்டினோமே

மேல் 4

காயம் - உடம்பு, அடிமை - தொண்டன், வாய்மை - உண்மை, தூய்மை - புனிதம், துப்புரவு, நேயம் - அன்பு மனம் இலிங்கம்.

வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டீற் பூட்டி
அஞ்சலென்றாண்டு கொண்டாயதுவுநின் பெருமையன்றே

நெஞ்சகங்கனிய மாட்டேன் நினையுள் வைக்க மாட்டேன்
நஞ்சிடங் பொண்டகண்டா என்னெனன் நன்மைதானே மேல் 5

ஆசைவன் பாசமெய்தி அங்குற்றே னிங்குற்றேனாய்
ஊ சலாட் டுண்டு வாளா உழந்துநா னுழிதராமே
தேசனே தேசமூர்த்தி திருமனைக் காடுமேய
ஈசனே யுன்றன் பாதம் ஏத்துமாறருனெம் மானே மேல் 8

பாசம் - பற்று, வாளா - சும்மா
உழிதராமே - உழலாமல்

நிறைவிலேன் நேசமில்வேன் நினைவிலேன் வினையின் பாசம்
மறைவிலே புறப்பட்டேறும் வகையெனக் கருளெ னெம்மான்
சிறையிலேன் செய்வ தென்னே திருவடி பரவியேத்தக்
குறைவிலேன் குற்றந்தீராய் கொன்றை சேர்சடையினானே. மேல் 9

நடுவிலாக் காலன்வந்து நணுகும்போ தறிய வொண்ணா
அடுவன அஞ்சு பூதம் அவைதமக் காற்ற லாகேன்
படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனித வாழ்க்கை
கெடுவதிப் பிறவி சீசீ கிளரொளிச் சடையினாரே. மேல் 10

நடு - நீதி, காலன் யமன், நணுகுதல் கிட்டுதல், அடைதல்,அஞ்சு பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் அஞ்சு - ஐந்து வில்லுக்கு விசயன் எனப்போற்றப்படும் அர்ச்சுனன் சிவபூசை செய்வதில் ஈடுபாடுடையவன். தம்பி வீமன் மரம்செடி கொடி குளங்களிலேயுள்ள மலர்களைப் பறியாமல், அப்படியே விட்டு ஆண்டவனுக்கு மான சீகமாக அர்ப்பணம் செய்வான். பெர்னாட்ஷா ரோசாமலரைப் பிடுங்காமல் செடியிலே விட்டு அனுபவிக்க வேண்டும் என்கிறார். இப்பாதையிலே நம்மை வழிநடத்துகிறார் தாயுமானவர் இப்படி

பண்ணேன் உனக்கான பூஜை ஒருவடிவிலே
பாவித்து இறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலருடுநீயே இருத்தி, அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன், அல்லாமல் இருகைதான் குவிக்கஎனின்
நாணும், என் உளம் நிற்றிநீ
நான்கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால்
நான்பூஜை செய்யல் முறையோ?
விண்ணேவிண் ஆதியாம் பூதமேநாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே அவித்தின் முளையே
கண்ணே கருத்தேஎன் எண்ணே எழுத்தே
கதிக்கு ஆன மோனவடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே கருணாகரக்கடவுள் 6

நாணும் - தயங்கும், நிற்றி - நிற்கின்றாய், விண் ஆதியாம் பூதமே - வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம்பூதங்கள் மேதக்க கேள்வியே - ஆன்ம ஆய்வே

உள்ளத்திற் காண்பா யெனில் கோயில்
உள்ளேயும் காண்பாய்

# தாய்தரும் செல்வம் துர்க்கா லட்சுமி.

திரு. கு.நவரத்தினராஜா அவர்கள்

தாயின் மடியிலிருக்கும் குழந்தைகளுக் கவலை ஏது? திருமகளின் உண்மையான பக்தர்களும் இதே நிலையில் இருக்கிறார்கள். தாயின் மடியை விட்டு இறங்கிக் குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும் போது, தாய் வேறு வேலைகளைப் பார்க்கப் போகிறாள். குழந்தை பசியினாலோ அல்லது வேறொரு காரணத்தினாலோ அழும்போது தாய் ஓடிவந்து குழந்தையை மடியில் வைத்துக் கொள்ளுகிறாள். அல்லது இடுப்பில் வைத்துக் கொண்டு உலாவுகிறாள். இந்த உண்மையையும் லட்சுமி பக்தர்கள் அறிந்து தருணத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நான் யார்? ஒரு குழந்தை, இரவில் அழுது கொண்டிருக்கும் குழந்தை; ஒளி காணாது அழுது கொண்டிருக்கும் குழந்தை. அழுகை தவிர வேறு பாஷை தெரியாத குழந்தை, என்று ஆங்கிலக் கவிஞர் ஒருவர் பாடியிருக்கிறார். அழுகை தாயாருக்குப் புரியும் பாஷை என்பதை அறிந்திருந்தும் லட்சுமி பக்தர்கள் மக்களுக்கும் மகாலட்சுமிக்கும் உள்ள உறவு பற்றிக் கொண்டிருக்கும் கொள்கையும் இது.

ரௌந்திர பாவத்தில் லட்சுமித் தாயே துர்க்கையும் ஆகின்றாள். ரௌந்திர பாவம் சாந்தமுற்று அதன் நோக்கம் பரவும்போது துர்க்கையே லட்சுமி ஆகின்றாள். உமாதேவி ஆகிறாள். இது தேவி பக்தர்களான பேரறிஞர்களின் கருத்து. எனவே தேவியின் தந்திர நூல்கள் துர்க்காதேவியை மங்கள வடிவானவள் என்றும் கருணை வடிவானவள் என்றும் குறிப்பிடுவதைக் காண்கிறோம். 'நீயே வைணவி ; சக்தியும் வீரியமும் நீயே! ; என்றும் தந்திர நூல்கள் தேவியை நோக்கி முறையிடுகின்றன. சைவ முறைப்படி ஆராதிக்கும் போது சக்தி மகாலட்சுமியாகவும், தந்திர சாஸ்திர முறைப்படி ஆராதிக்கும் போது சக்தி துர்க்கையாகவும் காட்சி தருகிறாள் என்பர்.

'சக்தியின் வடிவு எது என்னில் தடையிலா ஞானமாகும்' என்று கூறுவதுண்டு, ஆகவே சிவஞானம்தான் சக்தி என்கிறார்கள். இது "சித்சக்தி" என்றும் சொல்லப் படுகிறது. சிற்சக்தி வித்தை ஆகிற சரஸ்வதியாகவும், பொருளாகிற லட்சுமியாகவும், வெற்றியாகிற துர்க்கையாகவும் காட்சி வழங்கக் காணலாம் என்றும் சொல்லுகிறார்கள்.

இறைவனுடைய சக்தி வித்யா சக்தியாவது போல் லட்சுமி சக்தியும் ஆகிறது. உலகத்தைக் காக்கும் திருவுளத்தோடு இறைவன் வீற்றிருக்க, அவன் சக்தி லட்சுமி யாகிறது, என்பர். அழிக்கும் திருவுள்ளத்தோடு இருக்க அவன் சக்தி துர்க்கையாகின்றது. 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறன் அவளும்நிற்பன்' என்ற வாக்கின் பொருள் கூர்ந்து நோக்கத்தக்கது.

சாதாரணமாக வெற்றியோடும் பொருளோடும் நிற்கும் லட்சுமியை லட்சுமி துர்க்கை என்றும், துர்க்கா லட்சுமி என்றும் அழைக்கிறார்கள். இப்படியே சரஸ்வதி துர்க்கையும் உண்டு. ருத்திர துர்க்கையும் உண்டு. ருத்திர துர்க்கைக்குப் பத்துக் கைகளும் சரஸ்வதி துர்க்கைக்கு எட்டுக் கைகளும் லட்சுமி துர்க்கைக்குப் பதினெட்டுக் கைகளும் உண்டு என்கிறார்கள். லட்சுமி துர்க்கையை அஷ்டாதச புஜ ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி, என்று கூறுவதும் உண்டு.

லட்சுமி துர்க்கையின் பதினெட்டுக் கைகளிலும் பதினெட்டு ஆயுதங்கள் உண்டு. அவற்றை வலதுகை கீழ்ப்புறமிருந்து வரிசையாக இடதுகை கீழ்ப்புறம் வரையில் எண்ணிப் பார்க்க அவை முறையே அட்சமாலை, கமலம், பாணம், சக்தி, வச்சிரம், கதை, சக்கரம், திரிசூலம், பரசு, சங்கு, மணி, பாசம், சத்தி, தண்டம், கேடயம்,

வில், பானபாத்திரம், கமண்டலம் என்பனவாகும் என்று லட்சுமி துர்க்கையின் வைபவம் குறித்து எழுதப் பெற்றிருக்கும் கட்டுரை ஒன்று தெரிவிக்கிறது.

இந்த ஆயுதங்களில் பாணம் முதலிய பன்னிரண்டு ஆயுதங்கள் காமம், வெகுளி முதலிய சத்துருக்களை ஒழிப்பதற்கு நினைவுக்குறி என்பர். சங்கு, மணி ஆகியவை வெற்றிக்குறி என்பர். அட்சமாலை, கமண்டலம் முதலியன அம்மையின் சாந்த சொருபத்தைக் காட்டும் என்பர். கமலம் தியானிக்கும் சித்தம் இப்படி மலர்ந் திருக்கும் என்பதற்கு அறிகுறி என்பர்.

எருமைத் தலையின்மேல் துர்க்காலட்சுமி நிற்பது ஆணவமலத்தின் வலிமையை அடக்கியிருக்கும் நிலைமையைப் புலப்படுத்துகிறதாம். தேவி தாமரையின்மேல் நிற்கும் போது எப்போதும் தியாகம் செய்யும் அன்பர்களின் உள்ளத்தாமரையில் தேவி வீற்றிருக்கிறாள் என்பதை நினைவூட்டுகிறதாம்.

இத்தேவி செம்பவளத் திருமேனியையும் தாமரை ஆசனத்தில் வீற்றிருப்பதாக ஒரு தியான மந்திரம் தெரிவிக்கிறது. இந்த லட்சுமி துர்க்கையைத் தக்க முறையில் உபாசிப்பவர்கள் அஷ்டலட்சுமி கடாட்சத்தையும் அடைவார்களாம். சித்திகளை இனிது பெறுவார்களாம். இத்தேவி தன் தொண்டர்களுக்குத் தலைமைப் பதவியை அருளுகிறாள் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை. இத்தேவியின் அருளால் வறிஞன் செல்வனாகிறான். மந்தன் மதியூகி ஆகிறான். ஊமன் கவிஞனாகிறான் என்றும் தேவி மான்மியம் தெரிவிக்கின்றது.

துர்க்காலட்சுமி மங்களசாந்த நிலையில் காட்சியளிக்கிறாள். தோற்றம் கம்பீரமானது எனினும் தேவியின் உள்ளம் அமைதியாக மங்களம் தருவதிலேயே ஈடுபட்டிருக்கிறது. இந்த நிலையில் இத்தேவியை தருமை ஆதீனத்தில் தரும்புரீசுவரர் ஆலயப் பிரகாரத்தில் வாயு மூலையில் ஒரு கோவில் அமைத்துப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

நன்றி லட்சுமி

(வரலாறும் வழிபாடும்)


# சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்

உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு
ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே
இப்புண்ணிய காரியத்துக்கு
ஒப்புதல் தாருங்கள்.

தொடர்புகளுக்கு:
ஆறு. திருமுருகன்
தொலைபேசி
021-222 6550

கண் வைத்திய நிபுணர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr . சிவந்தா, 021-222 3149
யாழ், போதனா வைத்தியசாலை

# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

இதனைக் கேட்ட உக்கிரபாண்டியர் வெகுண்டு நால்வகைச் சேனையுடன் நகர வாயிலை நீங்குமுன் தேவர்கள் உக்கிரபாண்டியரின் சேனைகள் மீது படைக்கலங்களை விட்டுப் போரிட உக்கிரபாண்டியரின் சேனைகளும் தேவர்கள் மீது படைக்கலங்களை ஏவிக்கொன்று குவித்தார்.

பின்னர் இந்திரனுக்கும் உக்கிரபாண்டியருக்கும் கடும் போர் நடக்கும் போது உக்கிரபாண்டியர் தமது கையிலிருந்த வளையத்தைச் சுழற்றி வீசினார். அது இந்திரனின் சிரசை விடுத்து மகுடத்தைச் சிதைத்தது. இந்திரன் ஓட்டமெடுத்தான். தெய்வச் செயல் தலையோடு போகாது முடியோடு போயது வளை. இந்திரன் தன் பிழைகளை உணர்ந்து மழை தருவேன் மேகங் சிறையிலிருந்து விடும்படி உக்கிரபாண்யருக்கு ஓலை போக்கினான்.

ஓலை கொண்டு சென்ற தூதுவன் உக்கிரபாண்டியரை வீழ்ந்து வணங்கி ஓலையை வாசித்துக் காட்டினான். உக்கிரபாண்டியர் இந்திரனை நம்பாமையால் மேகங்களைச் சிறையிலிருந்து விடுவிக்க மறுத்தார். அப்போது இந்திரனின் நண்பனான ஒரு வேளாளன் வந்து மகாராசாவே! நான் பிணை என்று வணங்கினான்! இடுக்கண் வந்து உயிருக்கு நாசம் விளைவிப்பினும் வாய்மை காத்துக் குற்றமற ஒழுகும் வேளான மரபிற் பிறந்த அவனுடைய வார்த்தையை ஆப்தவாக்கியமாக நம்பி மேகங்களை விடுத்தார். பின்னர் இந்திரனின் ஏவலினால் மேகங்கள் மாதம் மும்மாரி பொழிந்தன.

## 15. மேருவைச் செண்டாலடித்த கதை.

அகத்திய முனிவர் உபதேசம் செய்தபடி உக்கிரபாண்டியர் சோமவார விரதம் அனுட்டித்து வந்தார். அதன் பயனாக காந்திமதிக்கு சற்புத்திரன் அவதரித்தான். அப்புத்திரனுக்கு வீரபாண்டியன் என்று நாமம் சூட்டி உரியகாலத்தில் போர்ப் பயிற்சி முதலியன அளித்து மகிழ்ந்திருக்கும் காலத்தில் கிரநிலைகளின் கோளாறால் மழை பெய்யவில்லை. இதனால் பூமி வரண்டது, நீர் நிலங்கள் முதலியன வற்றின. நாட்டில் பஞ்சம்பசி மிகுந்து காணப்பட்டது. உக்கிரபாண்டியர் இதுபற்றிச் சோதிடரைக் கேட்டபோது, கிரகங்கள் சூரியனை நோக்கி நிற்றலால் ஒருவருடம் மழைபெய்யாது என்று கூறினார்கள். பிள்ளையின் பசியைத் தாய்பொறுக்க மாட்டாள். அதுபோல மக்களின் பசிநோயைக் கண்ட உக்கிரபாண்டியன் துடிதுடித்தார். சிவபெருமான் முன்னின்று உக்கிரபாண்டியர் மடைதிறந்த கடல்போல கண்களில் இருந்து கண்ணீர் பெருக, "பரம கருணா நிதியே! உயிர்களெல்லாம் பசியினால் மிகமிக வருந்து கின்றனவே என்று விண்ணப்பஞ் செய்தார். சோமசுந்தரக் கடவு காலத்தின் போக்கை நோக்கி இரக்கமில்லாதவர் போல வாளாவிருந்தார். உக்கிரபாண்டியர் கரையற்ற துன்பக் கடலில் அழுந்தி தன்மாளிகை திரும்பினார்.

தன் அரசுக் குடைக்கீழ் இருக்கும் உயிரினங்கள் பசிநோயினால் வருந்தும் தன்மையினால் உக்கிரபாண்டியர் உண்ணாது வெறுந்தரையில் உறங்கினார். கனவில் சிவபெருமான் சித்தராய்த் தோன்றி, அரசனே இப்போது மழைபெய்யாது. நீ மழையை

வேண்டுதலை விட்டு மேருமலையின் பக்கத்தில் ஒரு குகையில் ஏராளமான திரவியமுண்டு, நீ மகாமேருமலையின் செருக்கை அடக்க உனது செண்டினால் அடித்து, அதனை உன்வசப்படுத்தி, பொற்குவியல் மிகுந்த குகையினுள்ளே சென்று உனக்கு வேண்டுமளவு பொன்னை வாரி அள்ளிக் கொண்டு, மீண்டு பாறைக்கல்லால் வாசலை அடைத்துவிட்டு வருவாய்" என்று அருளிச் செய்தார்.

மறுநாள் உக்கிரபாண்டியர் விழித்தெழுந்து சோமசுந்தரக் கடவுளின் கருனையை வியந்து ஆலயத்தை வலம் வந்தார். பிராமணர்கள் ஆசிகூற நால்வகைச் சேனைகளுடன் பாண்டிநாடு, சோழநாடு முதலாகத் தென்னாடு வடநாடு முதலியவற்றையும் கடந்து, மலைகள், காடுகள், கடல் யாவும் கடந்து மகாமேருமலையைக் கண்டார். உடனே சேனைகளைப் பிரிந்து சென்று மகாமேருமலையை வலம் வந்து மேருமலையை மிகவும் பணிவுடன் அழைத்தார். மகாமேருமலை வரக்காலந்தாழ்த்தியது. கோபம் கொண்ட உக்கிரபாண்டியர், அந்தமலையின் செருக்கடங்கச் செண்டினால் சிகரத்தில் அடித்தார். அந்த அடிபட்டதும் அசைவில்லாத மேருமலை பொற்பந்துபோலத் துடிதுடித்தது. அதன் கொடுமுடிகள், கொடுமுடிகளில் இருந்த தேவர்கள் ஆலயங்கள் யாவும் சிதைந்தன.

உக்கிரபாண்டியரின் அடிதாங்காத மேருமலை அடங்கி ஒடுங்கி நாணி மெல்லமெல்ல சென்று அரசர் முன்னின்றது. அப்போது அரசன் இதுகாறும் வராதது ஏன் என்று வினாவினான். அதற்கு மேருமலை அடியேன் நாள்தோறு மீனாட்சி சமேத சோமசுந்தரக் கடவுளை வலம்வந்து வயங்குவது வழக்கம். இன்று ஒரு பெண்ணைக் கண்டதும் காதலுண்டாகி சோமசுந்தரர் ஆலயம் மறந்து விட்டேன். சிவத்துரோகம் செய்த பலன் அடியும் பட்டேன். நீர் இங்குவந்த காரணம் யாது சொல்லும் என்று கேட்டது. அதற்கு பாண்டியன் "மழைஇல்லாமல் எனது நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பசியினால் வாடுகின்றனர். இதனை சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டேன். அப்போது இவ்விடம் வந்து பொன் எடுக்கும்படி அருளினார்" என்று கூறினார்.

அப்போது மகாமேருபர்வதம் பொன்னிருக்கும் இடத்தைக் காட்டியது. பாண்டியன் அங்கு சென்று தனக்கு வேண்டியளவும் பொன்னை அள்ளிவாரிக் கொண்டு, மிகுதியை முன்போலப் பாறாங்கல்லால் மூடிவிட்டுத் தனது சேனைபரிவாரங்களுடன் மதுரை சென்றான். முதலில் சோமசுந்தரக் கோயிலை வலம் வந்து வணங்கிக்கொண்டு தனது திருமாளிகை சென்றான்.

பின்னர் தான் கொண்டுவந்த பொன்னைத் தேவர், தென்புலத்தார், சுற்றத்தவர், விருந்தினர் யாவருக்கும் கொடுத்து அரசாலும் காலத்தில் சிவபெருமான் ஆணையினால் நடக்கும் கிரகங்கள் மாறுபடப், பாண்டிய நாட்டில் மழைபெய்து செழிப்படைந்தது. உக்கிரபாண்டியனும் சிறப்புற அரசாட்சி செய்து விண்ணுலகை அடைந்தான்.

## உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

| | |
|---|---|
| அலுவலகம்: | ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், |
| ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், | கோவில் வீதி, |
| தெல்லிப்பழை. | நல்லூர். |

# நவராத்திரி நாயகி.

சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சமயம் என்பது மனிதனுடைய அன்றாட வாழ்கை அலுவல்களிலிருந்து விடு விக்கக் கூடிய ஒரு சிறந்த மார்க்கமாகும். இது இம்மை, மறுமை, வீடு மூன்றுக்கும் வழிகாட்டும். மனிதனுடைய புற வாழ்வுக்கு ஊனும் உடையும் உறையுளும் தேவை யாவதுபோல் அகவாழ்வுக்கு வழிபாடு தேவையாகும். இவ்வழிபாட்டைப் பலவகையில் வேறுவேறு காலங்களில் நடாத்தி வருகின்ற மரபு பல நூற்றாண்டு காலமாகப் பேணப்பட்டு வருகிறது. சிவனைக்குறித்துச் சிவராத்திரியும் சக்தியைக் குறித்து நவராத்திரியும், முருகனைக் குறித்துக் கந்தசஷ்டியும், விநாயகனைக் குறித்துச் சதுர்த்தியும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. இவற்றில் நவராத்திரி தினங்கள் சிறப்பான தேவி வழிபாட்டு நாட்களாகும். இந்நாட்களில் உலக மாதாவாகிய பராசக்தியை வேறுவேறு வடிவங்களில் வைத்துத் துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாகவும் வழிபடுகிறோம்.

"தனந்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்ப ரென்பர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி
ராமி கடைக்கண்களே". என்றார் அபிராமிப்பட்டர்.

மனித வாழ்க்கை செந்நெறியில் கழிய வேண்டுமானால் அறிவும் பொருளும் வீரமும் நல்லோர் சேர்க்கையும் நமக்குத்தேவை. இவற்றை உலக மாதாவாகிய தாயே உலகத்தவர்க்கு வழங்குகிறாள். "அவள் தந்த ஆக்கமிவ்வுலகமெல்லாம்" என்று சித்தாந்தம் கூறுகின்றது. நமது பேச்சும், மூச்சும், ஆக்கமும், ஊக்கமும், ஏற்றமும், தோற்றமும் அவளாலேயே வந்தமைந்துள்ளன. அவளே அருட்சக்தி. மாரிபோல் அவனருளை வாரி வழங்குகின்ற தெய்வம் அவள். அப்பனாகிய அவனும் அம்மையாகிய அவளும் ஒரு வடிவமே. ஒன்று அறிவுச் சொரூபம், மற்றது அன்புச் சொரூபம். சில இடங்களில் எம்பெருமானை "அத்தா" என்று அழைத்துப் பாடிய நாயன்மார் வேறு சில இடங்களிலே "அன்னே" என்று பாடுகிறார்கள்.

"அன்னே அன்னே என்றும் சிலசமயம்
நின்னையே ஐயாஐயா என்னவே
அலறிடும் சிலசமயம்" என்றார் தாயுமானவர்.

அம்மையும் அப்பனுமாய் இறைவனை வழிபட்டே அடியார்கள் அருள்முதம் மாந்தினர். இறைவன் யோகவடிவிலேயும் தேவியுடன் இருந்தே அருள்பாலிக்கின்றான் என்பதை மணிவாசகர் திருவாசகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

"நானும்என் சிந்தையும்
நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலும்
தாழ்சடையோன் ஆண்டிலனேல்"

என்பது அவர் கூற்றாகும்.

"மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்"

என்று பாடுகின்றார் ஞானசம்பந்தப் பெருமான். எனவே போக வடிவிலும், கோர வடிவிலும், யோக வடிவிலும் சிவமும் சக்தியும் இணைந்தே தொழிற்படும் என்பது புலனாகும். தேவியின் அருள் பெற்றவர்கள் பலர். கம்பர், காளமேகம், காளிதாசர், குமரகுருபரர், பாரதியார் போன்ற கவிஞர் பெருமக்கள் தேவியை வழிபட்டுப் புலமை பெற்று அரசரோடு சரியாசனத் தகைமைக் குரியராயினர். அபிராமிப்பட்டர் தமது அபிராமி அந்தாதியில் தேவி வழிபாட்டினால் அடையும் பேறுகளை விளக்குகிறார்.

"சொல்லும் பொருளும் என
நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுவார்க்
கேஅழி யா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ
லோகமும் சித்திக்குமே".

எனவே, நவராத்திரி நாட்களில் தேவியைக் கும்பத்திலேயும் பிம்பத்திலேயும் அமைத்து வழிபட்டு, வீரம் செல்வம் கல்வி என்பவற்றைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

❖❖❖ ❖❖❖ ❖❖❖

## சகலகலாவல்லி மாலை

(குமரகுருபரசுவாமிகள் அருளியது)

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே

*ப. உ: சகலகலாவல்லியே-* எல்லாக் கலைகளுக்கும் தெய்வமான கொடிபோன்ற சரசுவதித் தாயே, *எழுதா மறையும்-* எழுதாக்கிளவியான வேதத்திலும், *விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும்-* ஆகாயம், பூமி, நீர், தீ, கொடுங்காற்று ஆகிய ஐம்பூதங்களிலும், *அன்பர் கண்ணும் கருத்தும்-* உன் அடியவர்களின் கண்களிலும் உள்ளங்களிலும், *நிறைந்தாய் -* வியாபித்து இருப்பாய். *பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்-* பண்ணாகிய இசைக்கலையும் பரதமாகிய நடனக்கலையும், எல்லாவகைக் கல்வியும் இனிய சொல் அமைந்த செய்யுள் யாக்கும் கலையும், *யான் எண்ணும் பொழுது-* நான் நினைக்கின்ற வேளையெல்லாம், *எளிது எய்த நல்காய்-* இலகுவாக இடையத்தந்தருள்வாய்.

*பொ. உ.* சகல கலைகளுக்கும் அன்னையே! எழுதாமறையிலும் ஆகாயம் முதலாய ஐந்து பூதங்களிலும், அடியாரின் கண்ணிலும் கருத்திலும் நீ என்றும் நிறைந்து இருப்பாய். பண், பரதம், கல்வி, கவித்துவம் ஆகிய யாவும் யான் எண்ணும் பொழுதிலே மிகவும் எளிதாக அடைய உதவுவாய்.

*விளக்கம்:* நான்முகன் வேதங்கள் வல்லவன். வேதங்கள் எழுதாமறைகள். அவற்றை நன்குணர்ந்து வேதனாகிய நான்முகனின் நாவில் அமர்ந்திருக்கும் அவன் சக்தியே கலைமகள். கலைமகளின் தொகை அறுபத்து நான்கு என்பர். 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' என்றார் பிறரும். பரதம் என்பது பரதமுனிவரால் வகுக்கப்பட்ட பரதநாட்டியக் கலை.

# திருமுறைகள் காட்டும் வழிபாட்டுமுறைகள்.

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நாம் 'வழிபாடு' என்றதும்,கடவுள் வழிபாட்டையே உடனடியாக எண்ணிக் கொள்கிறோம். கடவுள் வழிபாட்டிற்கு முதன்மையளிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். கடவுள் எம்மீது கருணை கொண்டு; எமக்கு ஈய்ந்த பேருபகாரத்திற்கு ஈடாக எம்மாற் செய்யக் கூடியது, கடவுளை வழிபாடு செய்தலேயாகும். கடவுள் வழிபாடு செய்யாதவர்கள் செய்ந்நன்றி மறந்த குற்றத்திற்கு ஆளானவர். குருவழிபாடு, பெற்றோரை வழிபடுதல், பெரியோரை வழிபடுதல் என்பனவும் வழிபாட்டில் அடங் கு கின்றன.

"வழிபடு" என்ற பதம், வழிபாடு ஆக மருவிற்று என்று கூறப்படுகிறது. அதாவது எனக்குமுன் அருள் வாழ்வு வாழ்ந்த உயர்ந்தோர் எவ்வழிச் சென்றனரோ, அவ்வழிச் செல்லல் என்பதை உணர்த்துவதாக, "வழிபடு", என்னும் பதம் அமைகிறது. எம்மை, இம்மையில் வாழும் நெறிமுறையை அறிந்து வாழ்வதற்கும் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டபின்னர், முத்தியடைவதற்கும், வழிப்படுத்தல் நெறிப்படுத்தல் என்னும் பொருள் 'வழிபடு' என்னும் பதத்தில் தொனிப்பது உணரக் கூடியது. இவ்வாறு எம்மை நல்வழிப்படுத்துபவர்கள் யாவர்? இதற்கு விடையாதெனில், எம்மைக் கடவுள் வழிப்படுத்துகிறார், மற்றும் குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரும், எமது புன்னெறிய தனிற் செல்லும் போக்கினை மாற்றி நன்னெறியதனிற் செல்ல எம்மை வழிப்படுத்து கின்றனர். நாம் ஒரு கருமத்தையோ செயலையோ ஆற்றத் தொடங்குமுன்னர், கடவுளை வழிபடுகிறோம். குரு, பெற்றோர், பெரியோரை வழிபட்டு ஆசி பெறுகிறோம். அதனால் செய்கருமங்கள் சித்தி பெறுகின்றன, நல்லனவாயும் அமைகின்றன. இவற்றிற் கெல்லாம் காரணம், அவர்கள் எம்மை சரியானமுறையில் வழிப்படுத்துவதுதான் என்றால் அது மிகையாகாது. எந்தக் கருமத்தையும் நீதிவழுவாநெறிமுறையிற் செய்தல், வழிபா டேயாகும் என்பது பெரியோர் கருத்து. ஆலயந் தொழுவதும் வழிபாடுதான். ஓரிடத்தில் அமைதியாக இருந்து தியானித்தல், செபித்தல், நற்சிந்தனைகளில் திளைத்தல், பூசித்தல், பிரார்த்தித்தல், பண்ணோடு திருமுறைப் பாடல் என்பனவும் வழிபாட்டில் அடங்கும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் வழிபாடேயாகும். அத்தகைய வழிபாடு, வழிபடுபவரைத் தெய்வநிலைக்கு உயர்த்துகின்றது. என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

அக வழிபாடு, புறவழிபாடு எதுவாக இருப்பினும், மனம், மொழி, மெய்த் தூய்மையுடன் செய்யப்படும் போதே, அது உன்னதம் பெறுகிறது.

நீரும் பூவும் கொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் வழிபாடு அபிடேகம், அர்ச்சனையாகும். வழிபாட்டில் மிகப் பிரதானமான அம்சம், மனம் ஒருநிலைப்படுதல். மனத்தை அலைய விட்டு, செய்யப்படும் வழிபாடு, வழிபாடு ஆகாது.

கடவுள் வழிபாட்டிற்கு மனத்தூய்மை மிகவும் வேண்டற்பாலது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் தத்தம் வழிச் செல்ல விடாமல் அடக்கல் மூலம், மனத்தில் அழுக்குகள் படியாமல் தடுக்கமுடியும். அழுக்காறு, ஆசை, கோபம், செருக்கு, பகைமை உணர்வு, அழிப்பு எண்ணங்கள் என்பன மனத்தில்

படிகின்ற அழுக்குகள். எனவே எம்க்குப் பகையாக உள்ள மன அழுக்குகளைக் களைத்தல், ஐம்புலன்களை வெல்லுதல், அவற்றை எமது ஆட்சியில் கொண்டுவருதல், என்பவற்றின் மூலம் மனத்தூய்மையோடும் செய்யப்படும் கருமத்தோடும் ஒன்றித்துக் கடமையுணர்வோடு செயலாற்றுதலும், வழிபாடு ஆகின்றது. "செய்யுந் தொழிலே தெய்வம்" என்பதற்கிணங்க, ஒவ்வொருவரும் தாம் மேற்கொண்டுள்ள தொழிலை, தொண்டாக ஏற்று, பிறருக்கும் தமக்கும் தீமை விளைவிக்காத வகையில் திரிகரண சுத்தியுடனும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடனும், அருள்வழி நின்று ஆற்றி முடிக்கும் போது, அது தெய்வவழிபாடு ஆகின்றது.

திருமுறைப் பாடல்கள், இறைவனை வழிபடும் முறைகளை ஆங்காங்கு எடுத்துரைக்கின்றன. நீராடி, உடலைத் தூய்மைப் படுத்திக் கொண்டு, உள்ளத்தில் இறைவனிடத்து நீங்கா அன்பு வைத்து நீரும் மலரும் கொண்டு, பஞ்சப்புலன்களை அடக்கி, இறைவனை மனத்திலே நினைத்து, நீரினால் அபிடேகஞ் செய்து, மலர்கள் தூவி, தூபம் இட்டு, தீபம் காட்டி, திருமுறைப் பாடல்களை ஓதி, கண்ணீர் மல்க, நெஞ்சு நெக்குருக, மெய்சிலிர்க்கக், கைகூப்பி, பணிந்து போற்றி இறைவனை வழிபடும் முறை பற்றித் திருமுறைகள் கூறுகின்றன.

நமக்கு இந்த உடலையும் கருவிகரணங்களையும் இறைவன் தந்தமைக்குரிய காரணத்தை அப்பர் அடிகள் கூறும் போது,

"வாழ்ந்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்ததலைவனை" என அறிவிக்கிறார்.

"தலையே, நீ வணங்காய்"; "கண்காள், காண்மின்களோ்"; "செவிகாள், கேண்மின்களோ்"; "வாயே, வாழ்த்து கண்டாய்"; "மூக்கே, நீ முகராய்"; நெஞ்சே, நீ நினையாய்" என அப்பர் பெருமான், புலன்பொறிகளினதும் ஏனைய கரணங்களினதும் பொழிற்பாடுகளை இறைவனோடு சம்பந்தப்படுத்தி வரையறுக்கக் காட்டுகிறார். இறைவனை வாழ்த்துவதற்கே வாய், அவனை நினைத்து வழிபடுதலுக்கே நெஞ்சம், தாழ்த்தி வணங்குவதற்கே தலை, அவன் கழல்கள் ஈண்டையும் கண்டுகளிப்பதற்கே கண்கள், இறைவனின் புகழைக் கேட்பதற்கே செவிகள் என ஒவ்வொரு அங்கமும் அதற்கு இட்ட பணியைச் செய்யும் போதே, அங்கங்கள், திருஅங்கங்களாகப் போற்றப்படும் தகவினைப் பெறுகின்றன. திருநாவுக்கரசர், திருவங்கமாலைப் பதிகத்தில், இறைவனை வழிபடும் போது, உடலில் உள்ள அங்கங்கள் ஒவ்வொன்றினதும் கடமைக்கூறு என்ன என்பதை மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

புலம்பொறிகளும் மனமும், நாவுக்கரசரால் வரையறுத்து உரைக்கப்பட்ட கடமைக்கூறுகளுக்கு அப்பால் வேண்டப்படாத தொழிற்பாடுகளில் ஈடுபடுவதாலேயே உலகில் இன்று மனித குலம் சொல்லொணாத் துயரங்கள், தொல்லைகளையும், அனர்த்தங்கள், அழிப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உலகில் காணப்படும் வன்செயல்கள், அமைதியின்மை, குழப்பங்க போர்முனைப்புக்கள், மனிதகுல நாசங்கள், மனிதாபிமானமற்ற செயல்கள் முதலிய யாவற்றிற்கும் மனிதமனமும் புலன்பொறிகளும் கட்டுப்பாட்டைமீறி, தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கப் படுகின்றமையே காரணம் ஆகும்.

கடவுள் வழிபாட்டின் போது, வழிபடுநா்கள் வழிபடுத்தப்படுகின்றார்கள். அதனை இன்னும் விளக்கமாகக் கூறுவதாயின், வழிபடுநரின் மனம் முதலிய உட்கரணங்களும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புறக் காரணங்களும் வழிப்படுத்தி நெறிப்படுத்தப்படுகின்றன.

கடவுள் வழிபாட்டின் தொலைநோக்கு, பிறவித்துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று, இறைவனைச் சார்ந்து, முத்திநிலை பெற்று, பிறப்பு இறப்பு அற்ற பேரானந்தப் பெருவாழ்வில் திளைத்திருத்தல் ஆகும். இந்தப் பேரானந்தப் பெருவாழ்வினை எய்துதற்கு ஒருவரை வழிப்படுத்தல் அல்லது ஆற்றுப்படுத்தல், கடவுள் வழிபாடு ஆகும். அவ்வாறு வழிபடும் செயன்முறை நிகழும் போது மனஅடக்கம், புலனடக்கம் கைவரப் பெறுகின்றது. அதன் பயனாக இம்மையில் இன்பமும், சுகமும், அமைதி வாழ்வும் ஒருவருக்குக் கிடைக்கப்பெறுகின்றன. சமூக வாழ்வு சீரும் சிறப்பும் சாந்தியும் சமாதானமும் நிறைந்து வளம் பெறுகின்றது. இறுதியில் முத்தியின்பம் கிடைக்கின்றது. கடவுள் வழிபாடு ஒருவர் இக, பரசுகங்களைப் பெற, அவரை வழிப்படுத்துகின்றது என்பதில் எத்துணை உண்மை பொதிந்துள்ளது என்பது உணர்தற்பாலது. அதே வேளை, கடவுளை வழிபடாது, மனஅடக்கம், புலனடக்கம் இன்றி, கடவுளால் வழிபடுத்தி நெறிப் படுத்து தலைப் புறக்கணித்து, வீணில் காலத்தைக் கழித்து, அருள் நெறிக்குப் பொருந்தா ஒழுக்கம் புரிந்து, அல்லற்பட்டு ஆற்றாது அவலத்தில் கண்ணீர் வடித்துத் துயரில் ஆழ்ந்துள்ள பல்லாயிரக் கணக்கானோரைக் காண்கிறோம். எனவே, வழிபாடு செய்ய, அதன்மூலம் வழிப்படுத்தப்பட மறுப்பவர்கள், வாழ மறுப்பவர்கள் ஆகின்றனர். ஆகவே திருமுறைகள் காட்டும் வழியிலும் முறையிலும், இறைவனை வழிபட்டும் வழிப்படுத் தப்பட்டும் வாழ்தல், ஒவ்வொருவரினதும் கடனும், மனிதப்பிறவியின் பயனும் ஆகும் என்பதை உணர்வோமாக.

☸☸☸ ☸☸☸ ☸☸☸

## கடையவன் திருவடி பணிமனமே

ஈழமதில் ஞான ஒளிமிகு பரவிய
வழிதந்த சித்தனைப் பணிமனமே
ஈறில்லா வுயிர்களைப் பறித்திட நான்யார்?
என்றவன் மலரடி தொழுமனமே
சூழவே நீதியின் செங்கோல் ஒளிதரும்
சபையினில் இருந்தநல் நீதிபதி
தூக்குத் தண்டனை வழங்கிடு என்றவன்
உயிரினைப் பறித்திட யான்யாரோ?
தாழா தித்துயர் தகுமோ? தகுமோ?
தர்மமோ? இதுவென் செயல்தானோ?
தரணியில் இறைவன் படைப்பின் மகிமையைப்
பறித்திடல் பாவம் பெரும்பாவம்
வீழா தெழுவேன் விரைவேன் ஈழம்
விரைந்தே உலகைத் துறந்தவக்கும்
வியப்புற தெய்வ நிலைபெற வேனென
வந்தருள் தந்தவர் அடிபணிவோம்

சைவமே மெய்மைச் சமயமென் றியம்பிட
தக்கநல் வழிகள் பலவறிந்தும்
சஞ்சலம் இன்றியே எங்குறை தீர்ப்பவன்
வண்ணமும் இப்புவி மீதொளிர
ஐவராம் குரவர் அவர்வழி எங்கள்
ஐயன் எம்சிவன் அருளோங்க
அருளொளி நல்கிடும் பேரொளித் தீபமாய்
திகழ்ந்தநற் தேரடித் தேசிகனும்
குவலயம் மீதுயர் சைவம ணம்பெறத்
தோன்றியே மேற்கிவம் ஒளிதிகழ
கூர்பெறு செஞ்சொல் மாலைவெண் ணீறொடும்
கூத்தனின் மெய்ப்புகழ் மேன்மையுற
நலமுறு நிலைகண் டெழில்பெற வைத்தோன்
நம்குரு யோகரும் நனிதுவக்கும்
ஞானம ணிச்சுடர் என்றொளி கூட்டிய
பெரியக டைப்பித்தன் அடிதொழுவோம்.

ஆக்கம்: சு. குகதேவன்

சிறுவர் விருந்து:-

# நிலையிற் பிரியேல்.

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து!

நன்றாகப் படிக்கிறீர்களா? நன்கு விளையாடுகிறீர்களா? நல்லது! நல்ல பழக்க வழக்கங்களையும் பழகிக் கொண்டு, அவற்றை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலை நம்மைத் தவறு செய்யத் தூண்டக் கூடும். அதற்கு வசப்பட்டுத் தவறுசெய்தால் பின் நெடுக நினைத்து வருந்த நேரிடும். தற்செயலாய்த் தவறு நடந்து விட்டாலும், உடனேயே திருந்தி, இறைவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும். திருந்தி விட்டால் தெய்வம் காப்பாற்றும்.
இதோ, இந்தக் கதையைக் கேளுங்கள்! இதுவும் ஒரு உண்மைக் கதைதான்.

முன்னொரு காலத்தில் இந்தியாவிலிருந்து ஒரு துறவி யப்பான் நாட்டிற்கு யாத்திரை செய்தார். யப்பானில் 'நாரா' என்று ஒரு பெரிய நகரம். அங்கே ஒரு அழகான புத்தர் ஆலயம். தோடாய்ஜி கோயில் என்று அதற்குப் பெயர். இந்தத் தோடாய்ஜி கோயிலைப்போய்ப் பார்த்தார் நமது இந்தியத் துறவி, மிக விசாலமான இடத்தில், தூய்மைமிளிர அமைந்திருந்த அமைதியான அந்தக் கோயில் இவருக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. அங்கே சிலநாள் தங்க விரும்பினார்.

இவர் பலமொழிகளை கற்றவர், யப்பான் மொழிகூட அவருக்குத் தெரிந்திருந்தது. இந்திய தத்துவ ஞானத்தைத் தமதுமொழியில் எடுத்து விளக்கிய இந்தியத்துறவியை அந்த யப்பானிய மக்களுக்கும் மிகவும் பிடித்தது. சிவபெருமான் மாதிரி தலையிலே ஜடைமகுடம், உருத்திராக்கம், நல்லியல்புகொண்ட இந்தத் துறவிக்கு வேளாவேளைக்கு உணவு, பழங்கள் எல்லாம் கொடுத்து அவர்கள் பேரன்புடன் உபசரித்தார்கள். கங்கை நதி பாய்கின்ற இந்தியாவில் இருந்து வந்தவர் என்ற குறிப்பில் "காங்கோஜி" என்று மரியாதையுடன் இவரை அழைத்தார்கள். நல்ல கருத்துக்களைக் கேட்டுக் கொண்டார்கள். தம்முடனே அதே கோயிலில் வசிக்குமாறு புத்த துறவிகளும் வேண்டினர். இவருக்கும் அவர்களையும், அந்த இடத்தையும் மிகவும் பிடித்துக் கொண்டது. எனவே, இவர் அந்தத் தோடாய்ஜி கோயிலிலேயே தங்கி விட்டார். அங்கிருந்த புத்த துறவிகளும் இவருக்கு என்று தனியான அறை, படுக்கை வசதி எல்லாம் கொடுத்து மதிப்புடன் வைத்துக் கொண்டனர். இவரும் சர்வசுதந்திரமாக வசித்துவருகிறார். ஏதோ ஒருவகையில் இந்த காங்கோஜி சுவாமி மது அருந்தப் பழகிவிட்டார். ஒரு நாள் மித மிஞ்சி மதுவைக் குடித்துவிட்டு அறிவுமயங்கி அறையிலே உருண்டு கிடக்கிறார். இதைக் கண்ட அந்த மக்களுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. காங்கோஜியைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு வந்து கோயிலுக்கு வெளியே போட்டுவிட்டார்கள்.

குடிவெறி தெளிந்து எழும்பியபோது காங்கோஜிக்குத் தான்செய்த தவறு நன்றாக உறைத்தது. அந்த நிமிடமே அவர் தன்னை உணர்ந்தார். கண்ணீருடன் மௌனமாக மண்டியிட்டு அமர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்டார். அங்கிருந்த யப்பானியத் துறவிகளும், பக்தர்களும் அவரை மன்னித்துவிட்டார்கள். ஆனால், காங்கோஜி தம்மை மன்னிக்கவில்லை. உணவும், நீரும் அருந்தாமல் உபவாசமிருந்து அந்த இடத்திலேயே உயிர்நீத்தார். அவரிடம் பற்றும், மதிப்பும் கொண்ட யப்பானிய நாரா நகரத்து மக்கள் அவருடைய உருவச்சிலையை தோடாய்ஜி புத்தகோயிலின் வாயிலில் நிறுவினார்கள். இன்றும் அந்த இந்தியத் துறவியின் உருவச்சிலை யப்பானிலே, நாரா நகர புத்தவிகாரத்தின் வாசலில் உள்ளது.

"நிலையிற் பிரியேல்" என்று ஔவையார் கூறியதை நாம் மறக்கவே கூடாது.

# அம்பிகையின் தேர்வடம் பிடிக்க...

தையிட்டி.அ. இராசதுரை அவர்கள்

அம்பிகையின் தேர்வடம் பிடிக்க அம்பிகாவும் ஓடிவா...
வடம்பிடித்தால் வாழ்வில் நல்லருள் இடம் பிடிக்குமென்று

தான், சைவஉலகமும் ஒன்றாய்த் திரளுது தாயே...

வடக்குவீதி பராசக்திப் பாட்டியும் தெற்குவீதிப்

பரமசிவன் பாட்டாவும்..கூட்டாய் ஓடிவரும் வடிவைப்பார்..

வடம்பிடித்தால்..அவர்கள் பேத்திமாருக்கும் ஐப்பசியில்

எப்பசியும்.. ஆறிவிடும்தானென்ற ஆத்திகேடாம்..

இப்புவியில் எப்பசியும்தான் தீர்ந்துபோனால் மானிடப்
பிணிகளும் மாய்ந்துபோய்விடுமே...

நாட்டிலும் வீட்டிலும் ஏட்டிலும் அருளாட்சியின்

அற்புதங்கள் பொற்பதமாய் பேசப்படுமே...

அந்தமாகடலும்தான் அருளோசை கொண்டு

பொங்குதமிழ் கடலாய் ஆற்பரித்திடுமே..

பெரியதாயே கோடி நமஸ்காரம் கோடி நமஸ்காரம்..

சகலமும் நீயே என்றுதான் பண்ணிசைபாடி
சகலரும்..நின் தேர்வடம் பிடித்து தேரிழுக்கிக்கனமே..

நின்னடிவந்துவிட்டோம் தாயே..
சரணமம்மா சற்குரு நாயகியே...
சரணமம்மா சற்குரு நாயகியே...
சரணமம்மா சற்குரு நாயகியே...

⌘⌘⌘ ⌘⌘⌘ ⌘⌘⌘

# கற்புக் காத்த காரிகை.

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்.

இயற்பகை நாயனாருடைய துணைவியார் இனிய நலம் யாவும் ஒருங்கு அமையப் பெற்றவர். அவர் நாயனாருடைய சொல் திறம்பாமல் கற்பினைக் காத்த காரிகையார் என்றால் மிகையாகாது. இயற்பகையார் மனைவியாரோடு இணைந்து இல்லற வாழ்க்கையை இனிது இயற்றி வந்தார்.

இயற்பகையார் ஒருநாள் திடீரென்று மனைவியாரைப் பார்த்துச் சொன்னார்: "விதி மணக்குல மடந்தையே! நான் இன்றுனை இந்த மெய்த்தவருக்குக் கொடுத்தேன்" என்றார். இயற்பகையார் கொஞ்சமேனும் மனப்பதட்டமோ தடுமாற்றமோ இல்லாமல் இயல்பாக இயம்பினார்.

கணவனாருடைய திடுக்கிடும் வார்த்தையைக் கேட்டு மனம் மறுகினார் மனைவியார். தேன்துளி சிந்தும் வாசனை மிக்க மலர்களைச் சூடிய கூந்தலினையுடைய மனைவியார் கண்ணீர்த் துளிகளைச் சொரிந்தார்.

'விதி மணக்குல மடந்தையே' என்று கணவர் விழ்த்து இப்படி விளம்பினாரே என்று விதிர்விதிர்த்தார்.

வாழ்க்கையில் சோதனைக்கு மேல் சோதனைகள் போதனைகளை மிஞ்சி வேதனைகளைக் கொண்டு வருவது ஒன்றும் வியப்பில்லை. ஆனால் இப்படியும் ஒரு வேதனையா? மனைவியார் எதிரே கணவனார் இயற்பகை. அவர் அருகாக அருமுனிவர் நிற்கின்றார். இவர் மனைவியாரைப் பார்த்து உன்னை நான் அவருக்கு ஈந்தேன் என்று எடுத்தியம்புகின்றார்.

இது காலவரை பூம்புகார் நகர் அறிய கணவனாருடைய சொற்றிறம்பாத மனைவியாருடைய கற்பு நெறி வாழ்க்கை எங்கே! இப்போது கணவனார் கட்டுரைக்கும் கடுநஞ்சுமிழும் சுடுசொல் எங்கே..!

மனைவியார் வாயே திறவாமல் இயற்பகையார் கட்டுரைப்படி முனிவர் பின் செல்லுவதா? அல்லது கணவனார் கருத்தை மறுத்து எதிர்த்து வாதாடுவதா? தெய்வக் கற்பிற் சிறந்த சேலிழையார்க் கணவனே கண்கண்ட தெய்வமாகப் போற்றிடினும் பெண்ணீர்மை பேணும் பெருங்கடன் அவர் உரிமை அல்லவா?

பெண்ணிற் சிறந்தது நாணம். நாணிற் சிறந்தது உயிர். உயிரிற் சிறந்தது ஒழுக்கம். ஒழுக்கத்திற் சிறந்தது கற்பு. கற்பை இழந்தால் அழிந்தது தான். அதை மீட்டும் கற்புக் கனலை வளர்க்க முடியாது!

ஒருபக்கம் நீதி நியாயம் ஒரு புறம் இருக்க- எதிர்ப்புறத்தில் மண முடித்த கணவனுடைய கருத்தை மறுப்பதும் மனைவியின் மாட்சிமை ஆகாது. இனி, வாக்கு வாதம் செய்யும் போக்கு உள்ளவர் அல்லர் பொன் போன்ற கணவர்.

இயற்பகை எளியவர் அல்லர். ஏமாளியும் அல்லர். இயற்பகையார் எல்லா நலமுஞ் சிறந்த வளம்மிகு பூம்புகார் நகரில் வாழ்பவர்.

"பூம்கார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்கு நீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந் தொழுக லான்"

என்று இளங்கோ அடிகளார் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் போற்றிப்

புகழ்ந்த பொன்னான ஆம்பயன் அனைத்தும் நிறைந்த பூம்புகாரில் குடிமுதல் வணிகர் இயற்பகையார். அளவில்லாத செல்வத்தில் வந்த அனைத்து வளங்களும் அமையப் பெற்றவர் இயற்பகையார். சிவபெருமானிடத்தில் அடிமைத் தொண்டில் சிறந்தவர். மெய்யடியார்கள் யாவரேயாயினும் எதை வேண்டினாலும் இல்லையே என்னாது ஈயும் இயல்புடையவர். அதனால் "இல்லையே என்னாத இயற்பகை" என்று உலகம் அவர் ஈகைத் திறனை என்றும் மறுவாது ஏத்தும். மாறுபாடில்லாத இல்லற வாழ்வில் ஈடுபாடு உடையவர். இல்லற இன்பத்தின் பயன் அடிமைத் தொண்டில் ஒழுகுதலே என்ற சிந்தனையில் உரனாக ஒழுகி வருபவர் இயற்பகையார்.

இவ்வாறு பகுத்து ஆராய்ந்து அறிந்து நல்லதொரு முடிவிற்கு வரும் சிந்தனையில் தம்மனத்தைப்பறி கொடுத்தவராக மனைவியார் நின்றார்.

இயற்பகையார் தமது திருமனையில் முனிவரைக் கண்ட மாத்திரத்தில் கும்பிட்டார். குதூகலித்துக் கொண்டாடினார்.

"எந்தை எம்பெருமான் அடியார்...இல்லை, எம்பிரான் தான் அடியார் வேடத்தில் அணைந்தாரோ..!" என்று செப்பி அதிசயங் கொண்டார். இயற்பகையார் சிந்தை அன்போடு சென்று முனிவரை வணங்கினார். அதிதிக்கான அருச்சனை வழிபாடுகளை ஆதரவோடு ஆற்றினார். பின்னர் முனிவரைப் பார்த்து முக அக மலர்வோடு மொழிவார்.

"எம்முன்னோர்களும் நாங்களும் முற்காலத்தில் செய்த பெருந்தவங் காரணமாகத் தானோ எனது இறைவனாகிய முனிவர் தலைவனார் எழுந்தருளிற்று." என்றார் இயற்பகையார்.

அது கேட்டு முனிவர் சொல்லுவார்:

"இயற்பகை! கொன்றை மாலை சூடிய சிவபெருமானுடைய பேரன்பர்கள் நினைந்து வேண்டின யாவையேனும் மறுக்காது விருப்பத்துடன் கொடுக்கின்றீராம். அந்த உண்மைத்' தன்மையைக் கேள்விப்பட்டோம்...நாமும் உம்மிடத்தே ஒரு பொருளை வேண்டி இன்று இங்கு வந்தோம்." என்று முனிவர் நின்று கூறினார். தொடர்ந்து முனிவர் இயற்பகையார் முகத்தை நோக்கிச் சொல்வார்:

"நீர் உவந்து தர உடன்படுவீராயின் அதை இவ்விடத்தில் நாம் இயல்பலாம்,"என்றார்.

இயற்பகையார் முனிவர் மொழிந்தது கேட்டு முன்பின் யோசனை இன்றிச் சொன்னார்:

"சுவாமி! தாங்கள் விரும்புவது என்னதான் உயர்ந்த பொருளாக இருந்தாலும் என்னை விட்டுப் பிரியக்கூடாத ஒன்றாயினும் அது எம்பெருமான் அடியார் உடைமை. அதில் அணுவளவேனும் மறுமாற்றம் இல்லை. தாங்கள் விரும்பிய பொருளை இன்னது என்று அருளிச் செய்யுங்கள்" என்றார்.

முனிவர் எடுத்து இயம்பினார்.

"நிலைபெற்ற காதலின் உன்னுடைய மனைவியைப் பெறவேண்டி நான் இங்கு வந்தேன்." என்றார்.

ஆளில்லாக் காலத்திலும் சொல்லத் தகாத வார்த்தையைக் கண்ணெதிரே நின்று கழறியது கேட்டு இயற்பகையார் கலங்கினாரல்லர். பொறுமைக்கும் அப்பால் போய் நின்றார். முன்னையினும் மிக மகிழ்ச்சி கொண்டார். முனிவரை வணங்கி வகுத்துரைப்பார்.

"என்னிடம் முன்பே உள்ளதொரு பொருளையே வினாவினீர்கள். எம்பிரான் எனக்கு அருளிய பேறுஇது.

இயற்பகையார் பின்னர் மனைவியார் இடத்தை நாடி விரைந்து சென்னார். தனது இல்வாழ்க்கைக்கு இனிமையாகவும் கற்பிற் சிறந்தவராயும் காதலுக்குரியவராகவும் அமைந்த தமது மனைவியாரைப் பார்த்துப் பகர்வார்: மனைவியாரை முனிவருக்குக் கொடுத்த செய்தியை.

மனைவியார் கணவனாருடைய கட்டுரையை மறுக்க மனம் வருமா? ஆனால் காலாதி காலமாக சந்ததி சந்ததியாக பரம்பரை பரம்பரையாக, வழிவழி வந்து கொண்டிருக்கும் தமிழ் இனம் பேணும் பெண்ணுரிமை வழக்கத்தை வழி மாற்றி விடலாமா?

கற்பு என்பது தமிழ்க்குலத் தாய்மாருடைய தேடுதற்கரிய அழியாப் பெருஞ் செல்வத்தை அழித்து விடலாமா?

தேவர்குறள் என்னும் ஒருவாசகம் கற்பை விதந்து ஓதம் மேன்மையை விலக்கி விடலாமா?

கற்பென்னும் கலங்கா நிலைமை உண்டாயின்
பெண்ணிற் பெருந்தக்க தொன்றில்லை - (54)
பிறதெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத்
தொழுவாள் பெய் என மழை பெய்யும். (55)
பெண்ணாவாள் கற்பினின்றும் வழுவாமல் நற்குண நற்
செயல்களில் நழுவாதவள் - (56)

அவை எல்லாம் ஒரு புறமிருக்க எதிர்ப்புறம் "கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை மெய்வழி அன்றென ஆய்விடும் - "என்று எண்ணி அலமந்து இடரப்பட்டார் அம்மையார். இருவேறு மாறுபட்ட கருத்து மோதலுக்குள் அகப்பட்டுச் சிந்தை நலிவுற்றார். நங்கை நல்லார்.

திடீரென அம்மையார் உள்ளத்தில் இருளில் ஒளி போல ஓருண்மை தெற்றெனத் தோன்றியது. அது அவருடைய கலக்கம் யாவையும் தவிடு பொடியாக்கி உறுதி பெற்றது.

கணவனார் ஆணை வழி ஒழுகுதல் கற்பரசி கண்ணியம் என்று கண்டார் மனைவியார். கணவராருடைய சொற்றிறம் புதல் கற்பிற்குப் பங்கம் என்னும் தேற்றம் பெற்றார் அப்பெண்ணரசி.

இயற்பகையாருடைய இல்லையே என்னாத ஈகைக்கு இசைவாக இயைந்தவராகிப் பின்வருமாறு இயம்புவார்.

"என்னுடைய உயிர்க்கொரு நாத! நீர் எனக்கு அருளிச் செய்த கட்டளை இதுவேயானால் அது ஒன்றை அவ்வாறு ஆற்றுவது தவிர எனக்கு உரிமை வேறு உளதோ!" என்று கூறித் தமது ஒப்பற்ற பெரியவராகிய கணவரை வணங்கினார் கற்புநெறி காத்த காரிகை நல்லார். இயற்பகையார் தம்மை வணங்கிய மனைவியாரைப் தாமும் பணிந்தார். பின்னர் தாமும் மனைவியாரை வணங்கினார்.

தொடரும்.

## இறைவனடி சேர்ந்த பெருந்தகைகளுக்கு

## இதய அஞ்சலி



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்


**அமரர். சி. சிவமகாராஜா**

(தலைவர் தெல்லிப்பழை
பல நோக்கு கூ.சங்கம்)



**செல்வி. அன்னலட்சுமி சின்னத்தம்பி**

வாழ்வகம் விழிப்புலனற்ற சிறார்களின்
இல்லத்தை ஸ்தாபித்த அன்னை



**திருமிகு. சு. பசுபதி**

சைவவித்தியா
விருத்திச்சங்க செயலாளர்
திருநெல்வேலி







அட்டைப்பதிப்பு : பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம் நல்லூர்.